## தினமலர் நாளிதழில் வெளிவந்த நடப்பு நிகழ்வுகள் (ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை )

**1.இந்தியாவில் ஜி.எஸ்.டி., வரி முறையை தனது சட்டசபையில் அங்கீகரித்த முதல் மாநிலம் எது?**

அசாம்

**2. கிருஷ்ண புரஷ்கார் என்னும் 12 நாள் ஆற்றுத் திருவிழாவை நடத்த உள்ள மாநிலங்கள் எவை?**

ஆந்திரா மற்றும் தெலுங்கானா

**3. புராஜக்ட் அனன்யா என்னும் புதிய வாடிக்கையாளர் டிஜிட்டல் சேவையை துவங்கி உள்ள வங்கி எது?**

சிண்டிகேட் பாங்க்

**4. இந்தியாவின் முதல் இ-நீதிமன்றம் எங்கு துவங்கப்பட்டுள்ளது?**

ஐதராபாத் (ஆந்திரா மற்றும் தெலுங்கானாவுக்கு பொதுவான நீதிமன்றம் இது)

**5. நாட்டின் முதல் பசுமை ரயில்பாதை திட்டம் எந்த ரயில் பாதை அறிமுகமானது ?**

ராமேஸ்வரம் - மானாமதுரை **114** கி.மீ., ரயில் பாதை. இது கழிவுகள் பாதையில் விழாத பயோ டாய்லெட் முறை.

**6. கோபின் - 3 என்னும் தொலை உணர்வு ரேடாரை விண்வெளியில் சமீபத்தில் நிலைநிறுத்திய நாடு எது?**

சீனா

**7. முறைப்படுத்தப்பட்ட துறைகளில் பணிபுரியும் பெண்களுக்கான மகப்பேறு விடுமுறை காலத்தை மத்திய அரசு சமீபத்தில் எப்படி மாற்றி உள்ளது?**

**2** குழந்தைகள் வரை **12** வாரங்களில் இருந்து **26** வாரமாக உயர்த்தி உள்ளது. கனடாவில் **50** வாரங்களும் நார்வேயில் **44** வாரங்களும் விடுமுறை தரப்படுகிறது. இந்த வகையில் இந்தியா **3**வது அதிக மகப்பேறு விடுமுறை தரும் நாடாக மாறி உள்ளது.

www.tnpscjob.com

**8. 'மிஷன் பாகிரதா' என்னும் திட்டம் சமீபத்தில் பிரதமர் மோடியால் தெலுங்கானாவில் துவங்கப்பட்டது. இதன் நோக்கம்?**

மிக சுத்தமான சுகாதாரமான குடிநீரை கிராமப்புறங்களில் ஒருவருக்கு **100** லிட்டர் குடிநீரும் நகர்ப்புறங்களில் **150** லிட்டரும் கிடைக்க செய்வது இதன் இலக்கு.

**9.அடுத்தடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் தொடர்ந்து 2 முறை தங்கப் பதக்கம் வென்ற வீரர் யார்?**

பிரிட்டனின் ஆண்டி முர்ரே, **2016** ரியோ மற்றும் **2012** லண்டன் ஒலிம்பிக்

**10. இடைமறித்து தகவல்களை திருட முடியாத குவாண்டம் செயற்கைக்கோளை சமீபத்தில் விண்வெளியில் ஏவிய நாடு ?**

சீனா

**11. 'ஜல் தரங்' என்னும் தேசிய ஒற்றுமைக்கான நீர்வழி இயக்கத்தை துவங்கியுள்ள மாநிலம் எது?**

இமாச்சல பிரதேசம்

**12. பி.எஸ்.ஏ., ஆஸ்திரேலியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியை வென்ற இந்திய வீராங்கனை யார்?**

தீபிகா பல்லிகல்

**13. சில்க் சிட்டி என்னும் பட்டு நகரம் - இந்த நூலை எழுதியவர் யார்?**

மறைந்த பாடலாசிரியர் நா. முத்துக்குமார்

**14. நாஸ்காம் எனும் சாப்ட்வேர் நிறுவனங்களின் கூட்டமைப்பு சமீபத்தில் எங்கு தனது ஸ்டார்ட் அப் கிடங்கை துவங்கி உள்ளது?**

விசாகப்பட்டினம்

**15. நமது கடற்படையின் கண்காணிப்புத் திறனை மேம்படுத்திட அமெரிக்காவுடன் நாம் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி நமக்கு கிடைக்கவுள்ள மேம்பட்ட திறனுடைய போர் விமானம் எது?**

போசெய்டன் **8AI**

www.tnpscjob.com

**16. நியுயார்க் நகரத்தில் உள்ள தமிழ் சங்கம் அளித்த 'தமிழ் ரத்னா' விருதை சமீபத்தில் பெற்றவர்**

இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான்

**17. சமீபத்தில் பிரிட்டனால் ஏவப்பட்ட உலகின் மிகப் பெரிய விமானம் ஏர்லேண்டர் எந்த வாயுவை பயன்படுத்துகிறது?**

ஹீலியம்

**18.சிரியாவில் நடந்து வரும் ஐ.எஸ்.ஐ.எஸ்., கலவரங்கள் எப்போதிருந்து துவங்கின?**

**2011** முதல்

**19) ஆசியா கண்டத்தில் கால்பந்துக்கான மிக பழமையான கோப்பை எது?**

தியூரந் கோப்பை - இதுவே உலகின் **3** வது பழமையான கால்பந்து கோப்பையும் ஆகும். முதலில் இங்கிலாந்தின் கால்பந்து கழகத்தின் கோப்பையும் **2** வது ஸ்காட்லாந்து கால் பந்து கோப்பையும் தொன்மையானவைகள் ஆகும்.

**20) 19 வது சார்க் மாநாடு எங்கு விரைவில் நடக்க உள்ளது?**

பாகிஸ்தான் தலைநகரம் இஸ்லாமாபாத் நகரில் நவம்பர் **9, 10** தேதிகளில்

**21) தென் இந்தியாவின் முதல் குழந்தைகள் நீதிமன்றம் எங்கு துவங்கப் பட்டுள்ளது?**

ஐதராபாத்

**22) நவம்பர் மாதம் கோவாவில் நடக்க உள்ள ஐ.எப்.எப்.ஐ., சர்வதேச திரைப்பட விழாவில் எந்த நாட்டின் திரைப்படங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட உள்ளது?**

தென் கொரியா

**23) சலீம் அலி பறவைகள் சரணாலயம் எங்குள்ளது?**

கோவாவில் உள்ள சோராவ் என்னும் மாண்டோவி நதி ஓர நகரத்தில்

www.tnpscjob.com

**24) யாங்ஸின் என்னும் புதிய இணைய தள சர்ச் இஞ்ஜினை திபெத்திய மொழியில் உருவாகியுள்ள நாடு எது?**

சீனா

**25) சிறி போர்ட் ஆடிட்டோரியம் எங்குள்ளது?**

டில்லியில். இங்கு விரைவில் பிரிக்ஸ் நாடுகளின் முதல் திரைப்பட விழா நடக்க உள்ளது

**26) ஒன் இந்தியன் கேர்ள் என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?**

சேத்தன் பகத்

**27) ரியோ ஒலிம்பிக் போட்டிகளில் இந்திய கொடியை ஏந்தி நம் விளையாட்டு வீரர்களின் முன்பாக சென்றவர் யார்?**

**58** கிலோ பிரிவில் வெண்கலம் வென்ற மல்யுத்த வீராங்கனை சாக் ஷி மாலிக்.

**28) இந்தியாவின் முதல் ஜவுளி பல்கலைக்கழகம் எங்கு துவங்கப்பட உள்ளது?**

குஜராத் மாநிலத்தில் உள்ள சூரத்.

**29) "coloursofglory.org" என்னும் இணைய தளம் எதோடு தொடர்புடையது?**

சமீபத்தில் குளோரி பவுண்டேஷன் என்னும் அமைப்பால் துவங்கப்பட்டுள்ள இந்த இணைய தளம் இந்திய ராணுவ வரலாற்றையும் அதன் தொன்மை மற்றும் சேவை தொடர்பான அறிய தகவல்களை கொண்டுள்ளது. நாடெங்கும் பல நகரங்களில் இது தொடர்பான நிகழ்ச்சிகளையும் இது நடத்த உள்ளது.

**30) மத்திய ரிசர்வ் போலீஸ் படையின் புதிய நல்லெண்ண தூதராக நியமிக்கப்பட்டுள்ள விளையாட்டு வீரர் யார்?**

ஒலிம்பிக் போட்டியில் சமீபத்தில் பாட்மிண்டன் வெள்ளி வென்ற பி. வி. சிந்து

www.tnpscjob.com

**31) இந்தியாவின் முதல் ஆற்றுத் தீவு மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள மஜூலி எந்த மாநிலத்தில் உள்ளது?**

மிஷிங் இன பழங்குடியினர் அதிகமாக வாழும் இந்தத் தீவு பிரம்மபுத்திரா நதியாலும் லோஹித் எனப்படும் அதன் துணை நதியாலும் உருவாக்கப்பட்ட ஆற்றுத் தீவாகும். இது அசாமில் உள்ளது.

**32) மத்திய அரசின் உஜாலா எனப்படும் எல்.இ. டி., பல்புகளை வழங்கும் திட்டத்தில் 2 கோடி பல்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ள மாநிலம் எது?**

குஜராத். **96** நாட்களில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**33) சொலுங் எனப்படும் பழங்குடியின திருவிழா எங்கு, எதற்காக நடத்தப்படுகிறது?**

அருணாச்சல பிரதேசமாநிலத்தில். இது ஒரு விவசாய திருவிழா.

**34) பிரிக்ஸ் நாடுகளின் சுற்றுலா மேம்பாட்டுக்கான மாநாடு எந்த பாரம்பரிய இடத்தில் நடைபெற்றது?**

மத்திய பிரதேசத்தில் உள்ள கஜுராஹோ.

**35) சிக்ஸ் மெஷின் என்னும் புத்தகத்தை எழுதியவர்.........**

வெஸ்ட் இண்டீஸ் கிரிக்கெட் வீரர் கெய்ல்

**36) "தேசிய மாதிரி ஆய்வு மையம்' நடத்திய சர்வே படி, சுகாதார அடிப்படையில் மிக தூய்மையான மாநிலம்....**

சிக்கிம்

**37) தேசிய உணவு மற்றும் விவசாய கழகத்தின் சிறந்த தோட்டக்கலை விருதை 2016 ம் ஆண்டிற்காக வென்ற மாநிலம்**

ஹரியானா

**38) 50 சதவீத மானியத்துடன் ஸ்கூட்டி வாகனத்தை தனது மாநில கல்லூரி மாணவிகளுக்கு தர உள்ள மாநிலம்**

காஷ்மீர்

www.tnpscjob.com

**39) மெர்ல்போன் கிரிக்கெட் கிளப் அமைப்பின் வாழ்நாள் சாதனையாளர் விருதை வென்றுள்ள ஒரே இந்திய பெண் கிரிக்கெட் வீரர்**

அஞ்சும் சோப்ரா

**40) ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் சமீபத்தில் மொழி பெயர்க்கப்பட்ட மொழி**

சமஸ்கிருதம்

**41) கிருஷி விஸ்வ வித்யாலயா எனப்படும் விவசாய அருங்காட்சியகம் எங்கு உள்ளது?**

சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூர்.

**42) ராம்குமார் ராமநாதன் எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

டென்னிஸ்

**43) ஜியோனி மொபைல் நிறுவனம், எந்த மாநில அரசின் கூட்டு முயற்சியோடு இந்தியாவில் உற்பத்தியை தொடங்க உள்ளது?**

ஹரியானா

**44) வெனிசுலா நாட்டின் மார்கரிட்டா நகரத்தில் தற்போது நடந்து கொண்டிருக்கும் முக்கிய நிகழ்வு எது?**

அணி சேரா நாடுகளின் மாநாடு

**45) நாட்டின் தலைமை பொருளாதார நிபுணர் அரவிந்த் சுப்ரமணியம் தலைமையில், எந்த பொருளின் பற்றாக்குறை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது?**

பயறுகள்

**46) 2016ம் ஆண்டு துலீப் கோப்பையை (கிரிக்கெட் ) வென்ற அணி?**

இந்தியா ப்ளூ

**47) ஸ்வச் பாரத் எனும் தூய்மை இந்தியா திட்டத்தின் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ள மூதாட்டி யார்?**

**105** வயது குன்வர் பாய்

www.tnpscjob.com

**48) 'இந்திரா 2016' என்பது எந்த நாட்டுடன் இந்தியா கொண்டுள்ள ராணுவ பயிற்சி?**

ரஷ்யா

**49) உலகின் மிகப் பெரிய சூரிய ஒளி மின்சார உற்பத்தி நிலையம் எங்கு அமைக்கப் படுகிறது?**

ராமநாதபுரம், கமுதியில்.- அதானி குழுமத்தோடு தமிழ்நாடு அரசு இணைந்து அமைக்க உள்ளது.

**50) ஜெஸ்ஸி ஓவன்ஸ் ஒலிம்பிக் நல்லெண்ண விருது இந்த ஆண்டு யாருக்கு தரப்பட்டுள்ளது?**

மறைந்த குத்துச் சண்டை வீரர் முகமது அலி.

**51) ஜி.எஸ்.டி.,கவுன்சில் எங்கு அமைக்கப்பட உள்ளது?**

புதுடில்லி

**52) 'பரம்இஷான்' என்னும் சூப்பர் கம்ப்யூட்டர் முறை எங்கு அமைக்கப்பட உள்ளது?**

ஐ.ஐ.டி., கவுகாத்தி

**53) 'டுவிட்டர்' மூலமாக எந்த பங்கு சந்தையின் புள்ளி விபரங்களை அறியலாம்?**

பி.எஸ்.,இ., எனப்படும் மும்பை பங்கு சந்தையின் புள்ளி விபரங்களை அறியலாம்.

**54) 'சார்க்' நாடுகளின் பாதுகாப்பு ஆலோசனை மாநாடு எங்கு நடைபெற உள்ளது?**

புதுடில்லி

**55) 'மலக்காஸ்' எனப்படும் புயலால் சமீபத்தில் பாதிக்கப்பட்ட நாடு எது?**

ஜப்பான்

www.tnpscjob.com

**56) சமீபத்தில் ஸ்காட்சாட்-1 என்னும் இந்திய கடல் ஆராய்ச்சி மற்றும் வானிலை பயன்பாட்டுக்கான செயற்கைக்கோளை ஐ. எஸ். ஆர். ஓ, வெற்றிகரமாக ஏவியதை அறிவோம். இதை ஏவிய பி. எஸ்.எல்.வி, ராக்கெட் அதற்கு முந்தைய ராக்கெட்டுகளை விட எப்படி வேறுபட்டது?**

முதன் முதலாக பி. எஸ். எல்.வி., ராக்கெட் இரண்டு வெவ்வேறு சுற்றுவட்டப் பாதைகளில் கொண்டு சென்ற செயற்கை கோள்களை நிறுவியது

**57) பிரிக்ஸ் யு-17 கால்பந்து போட்டிகள் எங்கு நடைபெற உள்ளன?**

கோவாவில்

**58) 2018, 2022 மற்றும் 2026 ஆண்டுகளில் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எங்கு நடைபெற உள்ளன?**

**2018 -** இந்தோனேசியா; **2022 -** சீனாவில் உள்ள ஹாங்சு; **2026 -** ஜப்பான்

**59) எல். இ.டி., விளக்குகளாக அனைத்தையும் மாற்றும் மத்திய அரசின் தேசிய தெருவிளக்கு திட்டத்தை முதன் முதலில் நடைமுறைப் படுத்திய மாநிலம் எது?**

ராஜஸ்தான்

**60) வியட்நாமில் சமீபத்தில் நடைபெற்ற ஆசிய பீச் விளையாட்டுகளில் தங்கம் வென்ற பெண்கள் அணி எது?**

இந்தியா

**61) ஐ. எஸ்., ஆர். ஓவுடன் இணைந்து கல்வியை மேம்படுத்தும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட மாநிலம் எது?**

தெலுங்கானா

**62) 2017ம் ஆண்டுக்கான 17 வயத்துக்குட்பட்டவருக்கான பிபா உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் எங்கு நடைபெற உள்ளன?**

இந்தியாவில் **2017ல்**

www.tnpscjob.com

**63) GLOBAL COMPETITIVE INDEX எனப்படும் தர வரிசையில் இந்தியாவின் நிலை என்ன? இதில் முதல் 3 இடங்களில் உள்ள நாடுகள் எவை?**

**138** நாடுகள் இடம் பெற்ற இந்த பட்டியலில் இந்தியாவின் தரம் **39.**இந்த பட்டியலில் முதல் இடத்தில் ஸ்விட்சர்லாந்தும், **2**ம் இடத்தில் சிங்கப்பூரும் **3** வது இடத்தில் அமெரிக்காவும் உள்ளன.

**64) கார்பன் மாசு இல்லாத விமான நிலையம் என்ற அந்தஸ்தை சமீபத்தில் பெற்ற விமான நிலையம் எது?**

புது டில்லியில் உள்ள இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையம். விளையிடப்படும் கார்பனின் அளவை உறிஞ்சி எடுத்து கார்பன் வெளிப்பாடே இல்லாததாக மாற்றும் அளவை கொண்டு சர்வதேச விமானநிலைய கவுன்சில் இந்த அந்தஸ்தை அந்த விமான நிலையத்துக்கு சமீபத்தில் கொடுத்துள்ளது. ஆசிய பசிபிக் பகுதியில் இந்த அந்தஸ்தை பெரும் முதல் விமான நிலையம் டில்லி விமான நிலையமாகும்.

**65) சமீபத்தில் மறைந்த கே. மாதவன் எதற்காக அறியப் படுகிறார்?**

கேரளாவை சேர்ந்த **101** வயது மாதவன் ஒரு விடுதலை போராட்ட வீரர்.

**66) 'தி மினிஸ்ட்ரி ஆப் அட்மோஸ்ட் ஹாப்பினஸ்' என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?**

அருந்ததி ராய்

**67) 2016ம் ஆண்டுக்கான நோபல் அமைதி பரிசு யாருக்கு தரப்பட்டுள்ளது?**

கொலம்பியா அதிபர் ஜுவான் மேனுவல் சாண்டோஸ். இவர் அந்த நாட்டில் நடைபெற்று வந்த உள்நாட்டு கலவரங்களை கட்டுக்குள் கொண்டு வந்து அமைதியை உருவாக்கியதால் இவ்விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**68) காமன்வெல்த் நாடுகளின் நிதியமைச்சர்கள் மாநாடு எங்கு நடந்தது?**

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் அமைந்துள்ள ஐ.எம்.எப், தலைமையகத்தில் நடந்தது.

www.tnpscjob.com

**69) சமீபத்தில் மறைந்த முன்னாள் கிரிக்கெட் வீரர் மேக்ஸ் வாக்கர் எந்த நாட்டை சேர்ந்தவர்**

ஆஸ்திரேலியா

**70) 2017ம் ஆண்டில் நடைபெற உள்ள 5 மாநில சட்டசபை தேர்தலில் இளைய வாக்காளர்களை கவர நமது தேர்தல் ஆணையம் எந்த சமூக வலைதள நிறுவனத்தோடு கை கோர்த்துள்ளது?**

பேஸ்புக்

**71) அன்டோனியோ குட்டரஸ் யார்?**

போர்ச்சுகல் நாட்டின் முன்னாள் அதிபர். ஐ.நா., சபையின் புதிய பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**72) 'ஹரித கேரளம்' என்னும் கேரள மாநிலத்தின் புதிய தூய்மை திட்டத்தின் விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

பாடகர் ஜேசுதாஸ்

**73) சமீபத்தில் மியான்மரில் தனது கிளையை துவங்கி உள்ள இந்திய வங்கி எது?**

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

**74) சமீபத்தில் உலகில் முதன் முதலாக ஓட்டுநர் இல்லாத பஸ் சேவையை துவக்கிய நாடு எது**

பிரான்ஸ

**75) இந்திய மகளிரின் திருவிழா என்ற பெயரில் நடத்தப்படும் பெண்களுக்கான நிகழ்வு எங்கு நடக்கிறது?**

புதுடில்லி. இது இந்திய பெண்கள் தயாரித்துள்ள ஆர்கானிக் பொருட்களுக்கான திருவிழா. அக்., **14** முதல் **23** வரை நடந்தது .

**76) உலக தர நாள் என்று கொண்டாடப்படுகிறது?**

அக்டோபர் **14**

**77) ஜி.மகாலிங்கம் சமீபத்தில் எதனால் செய்திகளில் இடம் பெற்றார்?**

செபி அமைப்பின் முழு நேர உறுப்பினராக இவர் சமீபத்தில் நியமிக்கப்பட்டார்.

www.tnpscjob.com

**78) பேரிடர் அபாய குறைப்புக்கான ஐ.நா.,வின் தலைமையகம் எங்குள்ளது?**

சுவிட்சர்லாந்தில் உள்ள ஜெனிவா

**79) அதிவேக ரயில் தயாரிப்பில் எந்த நாட்டுடன் இந்தியா சமீபத்தில் இணைந்துள்ளது?**

ஜெர்மனி

**80) நோபல் இலக்கிய பரிசை சமீபத்தில் அமெரிக்காவின் புகழ் பெற்ற பாடகர் பாப் டிலான் வென்றார். இந்த பரிசு தொகை எவ்வளவு?**

**6** கோடி ரூபாய்

**81) வெகு வேகமாக அவுட்டோர் மைதானத்தில் இருந்து இன்டோர் மைதானமாக மாற்றக் கூடிய மைதானம் இந்தியாவில் எங்கு சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது?**

ஆமதாபாத்

**82) முதல் முதலில் உலக சுனாமி விழிப்புணர்வு தினம் என்று கடைப்பிடிக்கப்பட உள்ளது?**

**2016** நவம்பர் **5**

**83) தொலை தூர மற்றும் அதி உயர ரிமோட் ஆய்வுக் கூடம் 'ஹிமான்ஷ்' எங்கு சமீபத்தில் நிறுவப்பட்டது?**

இமாச்சலப்பிரதேசம் மாநிலத்தில் உள்ள ஸ்பிடி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

**84) IAEA என்னும் பன்னாட்டு அணுசக்தி நிறுவனத்தின் தலைமையகம் எங்குள்ளது?**

பாரிஸ்

**85) மத்திய ஓமியோபதி கவுன்சிலின் தலைமையகம் எங்குள்ளது?**

புது டில்லி

**86) அல்மாட்டி அணை எங்குள்ளது?**

கர்நாடகா மாநிலத்தில். கிருஷ்ணா நதியில் இந்த அணை கட்டப்பட்டுள்ளது.

www.tnpscjob.com

**87) 2016ம் ஆண்டின் உலக கபடியில் கோப்பை வென்ற நாடு?**

இந்தியா, ஈரானை வீழ்த்தி கோப்பை வென்றது.

**88) 17 வயதுக்கு உட்பட்டவருக்கான 2016ம் ஆண்டின் பிபா கால்பந்து உலகக் கோப்பையை வென்ற நாடு?**

வட கொரியா. இந்த நாடு தான் **2** முறை இந்த கோப்பையை வென்றுள்ள ஒரே நாடாகும்.

**89) நாட்டின் முதல் ரயில்வே பல்கலைக்கழகம் எங்கு அமைகிறது?**

குஜராத் மாநிலத்தில் உள்ள வதோதரா நகரில் அமையவுள்ளது. இது ரயில்வே தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் நவீனத்துவம் ஆகியவற்றுக்காக இந்த பல்கலைக்கழகம் செயல்படும்.

**90) ஹைமா என்னும் புயல் சமீபத்தில் வீசி கடுமையான சேதம் அடைந்த நாடு எது?**

பிலிப்பைன்ஸ்

**91) பன்னாட்டு ஜிம்னாஸ்டிக்ஸ் கூட்டமைப்பின் புதிய தலைவர் யார்?**

மோரினாரி வதனாபே (ஜப்பான்)

**92) சமீபத்தில் திபெத் தலைவர் தலாய்லாமாவிற்கு கவுரவ குடியுரிமையை வழங்கிய நகரம் எது?**

இத்தாலியில் உள்ள மிலன் நகரம்

**93) குளோபல் பவர் சிட்டி இண்டக்ஸ் எனப்படும் சர்வதேச சக்திமிக்க நகர பட்டியலில் முதலிடத்தில் உள்ள நகரம் எது?**

லண்டன்.

**94) முதல் சர்வதேச புள்ளியியல் விருதை வென்றவர் யார்?**

டேவிட் காக்ஸ்

**95) ராணுவத்தில் ONE RANK ONE PENSION என்ற ஓய்வூதிய முறையை ஆராய மத்திய அரசால் நியமிக்கப்பட்டு சமீபத்தில் அறிக்கை தாக்கல் செய்த கமிட்டியின் பெயர் என்ன?**

நரசிம்ம ரெட்டி கமிட்டி

www.tnpscjob.com

**96) குளோபல் சிஸ்டம் மொபைல் அசோசியேஷன் தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?**

சுனில் மிட்டல்

**97) முதல் தேசிய ஆயுர்வேத தினம் என்று கடைப்பிடிக்கப்பட்டது? அதன் நோக்கம் என்ன?**

அக்டோபர் **28.** நீரழிவு நோயை தடுப்பதும் ஒழிப்பதும் இதன் நோக்கம்.

**98) 2016ம் ஆண்டின் மேன் புக்கர் விருதை வென்றவர் யார்? அதன் சிறப்பு என்ன?**

**'**தி செல் அவுட்**'** எனும் புத்தகத்தை எழுதிய பால் பீட்டி இவ்விருதை பெற்றுள்ளார். இவ்விருதை பெறும் முதல் அமெரிக்கர் இவர் தான்.

**99) நிதிச் சேவையில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பாக சிங்கப்பூர் தேசிய நிதியகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட மாநிலம் எது?**

ஆந்திரா

**100) மித்ரசக்தி என்பது எந்த நாட்டுடன் ஆன இந்திய ராணுவ ஒத்திகை?**

இலங்கை

**101) புகையிலைக்கு எதிரான 7வது சர்வதேச மாநாடு எங்கு நடக்க உள்ளது?**

இந்தியா

**102) பிரதான் மந்திரி சுரக்ஷித் மட்ரிட்வா அபியான் என்னும் சமீபத்திய திட்டம் எதோடு தொடர்புடையது?**

கர்ப்பிணிப் பெண்களுக்கான உடல்நல திட்டம். கருவுற்றிருக்கும் பெண்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனைகளை இது உள்ளடக்கியது.

**103) வரும் டிசம்பரில் நடக்க உள்ள துபாய் பன்னாட்டு திரைப்பட விழாவில் எந்த இந்திய நட்சத்திரம் வாழ்நாள் சாதனையாளர் விருதை பெற உள்ளார்?**

ரேகா

www.tnpscjob.com

**104) மனிதர் உருவாக்கியதில் ஆசியா கண்டத்தின் மிகப் பெரிய ஜங்கிள் சவாரியை எங்கு மேற்கொள்ள முடியும்?**

சத்தீஸ்கர் மாநிலத்தில் உள்ள நயா ராய்ப்பூர் வனவிலங்கு பாதுகாப்பகம்

**105) சம்பளம் பெரும் வேலையில் உள்ளவருக்கான வீட்டு கடன் திட்டத்தில் ஓவர் டிராப்ட் வசதியை சமீபத்தில் அறிமுகம் செய்துள்ள வங்கி எது?**

ஐ.சி.ஐ.சி.ஐ., வங்கி

**106) உலக வெஜிடேரியன் தினம் என்று கொண்டாடப்படுகிறது?**

நவம்பர் 1

**107) சவுர் சுஜாலா யோஜனா என்னும் திட்டம் சமீபத்தில் சத்தீஸ்கர் மாநிலத்தில் பிரதமரால் துவங்கப்பட்டது. இதன் நோக்கம் என்ன?**

இது மானியத்துடன் கூடிய சூரிய ஒளியால் இயங்கும் மின் மோட்டார்களை விவசாயிகளுக்குத் தரும் திட்டம்

**108) இந்தியாவில் எந்த மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சைபர் போலீஸ் நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன?**

மகாராஷ்டிரா

**109) எந்த மாநிலங்களில் திறந்தவெளி மலம் கழிப்பது அறவே இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது?**

கேரளா, இமாச்சலபிரதேசம், சிக்கிம்.

**110) 'மெக்ஸிகன் கிராண்ட்பிரி' சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?**

லீவிஸ் ஹாமில்டன்

**111) 2017ல் நம் நாட்டில் நடைபெற உள்ள பார்வையற்றோர் உலக கோப்பை கிரிக்கெட் தொடருக்கான தூதர் யார்?**

முன்னாள் இந்திய கேப்டன் டிராவிட்

**112) இந்தியாவில் முதன் முதலில் வங்கிச்சேவையில் ரோபோவை அறிமுகம் செய்துள்ள வங்கி எது?**

சிட்டி யூனியன் வங்கி. ரோபோவின் பெயர் லட்சுமி

www.tnpscjob.com

**113) 2016ம் ஆண்டு சிறப்பான கார்ப்பரேட் சேவைக்கான ' தங்க மயில்' விருதை வென்ற நிறுவனம் எது?**

ஸ்டீல் அத்தாரிட்டி ஆப் இந்தியா

**114) லட்சிய பாகிரதி எனப்படும் நீர்ப்பாசன திட்டத்தை துவங்கியுள்ள மாநிலம் எது?**

சத்தீஸ்கர்

**115) லிக்யூபைடு நேச்சுரல் காஸ் (LNG) மூலம் இயக்கப்படும் முதல் பேருந்து எந்த மாநிலத்தில் சமீபத்தில் அறிமுகம் செய்யப்பட்டது?**

கேரளா

**116) 2017 ம் ஆண்டுக்கான சுவிட்சர்லாந்து நாட்டின் சுற்றுலா துாதராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

பாலிவுட் நடிகர் ரன்வீர் சிங்

**117) தேசிய கேன்சர் விழிப்புணர்வு தினம் என்று கடைப்பிடிக்கப்படுகிறது?**

நவம்பர் **7**

**118) 2016ம் ஆண்டிற்கான பெண்கள் ஆசிய கோப்பை ஹாக்கி போட்டியை வென்ற நாடு எது?**

இந்தியா

**119) உலகின் மிக அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர் எது?**

சீனாவின் சூப்பர் கம்ப்யூட்டர் 'சன்வெய் டாய் ஹு லைட்'. இது தான் உலகின் அதிவேக சூப்பர் கம்ப்யூட்டர் என அறியப்படுகிறது.

**120) சமீபத்தில் 500 மற்றும் 1000 ரூபாய் செல்லாது என பிரதமர் அறிவித்ததை முதலில் தனது சட்டசபையில் தீர்மானம் ஒன்றின் மூலமாக ஏற்றுக் கொண்ட மாநிலம் எது?**

சத்தீஸ்கர்

www.tnpscjob.com

**121) மகாராஷ்டிராவில் நடந்த HAND IN HAND என்னும் 2 நாடுகளுக்கு இடையேயான கூட்டு ராணுவ ஒத்திகையில் இந்தியாவோடு இணைந்து கலந்து கொண்ட நாடு எது?**

சீனா

**122) பத்மினி ரவுத் எந்த விளையாட்டோடு தொடர்புடையவர்?**

செஸ்

**123) 2016ம் ஆண்டுக்கான தேசிய குழந்தைகள் திரைப்பட விழா எங்கு நடைபெற உள்ளது?**

ஜெய்ப்பூர்

**124) 2016ம் ஆண்டுக்கான உலக இன்டர்நெட் மாநாடு எங்கு நடைபெற்றது?**

சீனா

**125) 2016ம் ஆண்டுக்கான கவுரவ ஆஸ்கார் விருதை வென்றவர் யார்?**

நடிகர் ஜாக்கி சான்

**126) எந்த இந்திய மாநிலம் முதன்முதலாக அதன் அனைத்து மாவட்டங்களிலும் இணைய காவல் நிலையங்களை (Cyber Police Station) தொடங்கியது?**

மகாராஷ்டிரா. மாநிலத்தில் உள்ள **36** மாவட்டங்களில் இதனை தொடங்கியுள்ளது

**127) எப்.ஐ.சி.சி.ஐ., எனப்படும் இந்திய வாணிப மற்றும் தொழிற்சங்க கூட்டமைப்பின் புதிய தலைவர் யார்?**

பங்கஜ் படேல்

**128) உலக சமஸ்கிருத விருதை சமீபத்தில் வென்றவர்?**

மகா சக்ரி சிரிந்தோர்ன்**,** இவர் தாய்லாந்து இளவரசி.

**129) உலகின் முதல் பாலிவுட் தீம் பார்க் எங்கு உருவாக்கப்பட்டுள்ளது?**

துபாய்

www.tnpscjob.com

**130) இந்தியாவின் மிக நீளமான எக்ஸ்பிரஸ் ஹைவே எது?**

ஆக்ரா - லக்னோ இடையிலான **302** கி.மீ. நீளமுள்ள **6** வழி பாதை

**131) உலக கழிப்பறை தினம் என்று கொண்டாடப்பட்டது?**

நவம்பர் **19**

**132) நாட்டின் முதல் பேமென்ட் வங்கியை துவங்கி உள்ள நிறுவனம் எது?**

ஏர்டெல் நிறுவனம். இது ராஜஸ்தான் மாநிலத்தில் தொடங்கப்பட்டது.

**133) தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் புதிய தலைவர் யார்?**

உதவிர் சிங்மாலிக்

**134) 2016ம் ஆண்டுக்கான பன்னாட்டு சுற்றுலா சந்தை எங்கு துவங்கி வைக்கப்பட்டது?**

மணிப்பூர் மாநிலத்தில்

**135) மேம்பட்ட நீர் மேலாண்மை கண்காணிப்பு என்னும் ஆன்லைன் முறையை நீர் மேலாண்மைக்காக அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?**

ஆந்திரா

**136) 2016ம் ஆண்டுக்கான உலக ரோபோ ஒலிம்பியாட் எங்கு நடைபெற்றது?**

இந்தியா

**137) சர்வதேச தடகள அமைப்புகளின் கூட்டமைப்பு வழங்கிய 2016ம் ஆண்டுக்கான சிறந்த ஆண் வீரருக்கான விருதை வென்றவர் யார்?**

உசைன் போல்ட்

**138) தேசிய மாசுக் கட்டுப்பாட்டு தினம் என்று கடைபிடிக்கப்படுகிறது?**

டிசம்பர் **2**

**139) தேசிய பங்கு சந்தையின் புதிய தலைமை நிர்வாகி யார்?**

ரவிச்சந்திரன்

www.tnpscjob.com

**140) இந்தியாவில் ரொக்கப் பணம் இல்லாத முழுவதும் மொபைல் வர்த்தகத்தை டிசம்பர் 1 முதல் செயல்படுத்திய மாநிலம் எது?**

கோவா

**141) 145 எம் 777 ரக மிக லேசான ஹோவைட்சர் துப்பாக்கிகளை இந்தியா எங்கிருந்து வாங்க உள்ளது?**

அமெரிக்கா

**142) ஏ.ஐ.டி.ஏ., எனப்படும் அகில இந்திய டென்னிஸ் சங்கத்தின் முதல் பெண் தலைவராக யார் பதவி ஏற்றுள்ளார்?**

பிரவின் மகாஜன்

**143) 2016ம் ஆண்டுக்கான பார்முலா 1 அபுதாபி கிராண்ட் ப்ரீ கார் ரேஸ் பட்டம் வென்றவர் யார்?**

இங்கிலாந்தை சேர்ந்த பார்முலா **1** வீரர் லீவிஸ் ஹாமில்டன்

**144) 2016ம் ஆண்டுக்கான டேவிஸ் கோப்பை டென்னிஸ் சாம்பியன் பட்டம் வென்ற நாடு எது?**

அர்ஜென்டினா

**145) உலகில் பெரிய கிரிக்கெட் ஸ்டேடியம் எங்கு அமைய உள்ளது?**

குஜராத்தின் ஆமதாபாத்தில் உள்ள சர்தார் படேல் கிரிக்கெட் ஸ்டேடியத்திற்கு மொடேரா என்னும் பெயரும் உண்டு. தற்போது **54000** பேர் அமர்ந்து பார்க்க கூடிய இந்த மைதானம் **,** விரைவில் **1,10,000** பேர் அமரக் கூடியதாக அமைக்கப்பட உள்ளது. ஆஸ்திரேலியாவில் உள்ள மெல்போர்ன் மைதானத்தில் **100024** பேர் அமர்ந்து போட்டிகளை காண முடியும்.

**146) சமீபத்திய முடிவுகளின்படி பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் இந்தியாவின் நிலை என்ன?**

இந்தியா **7**வது இடத்தில் உள்ளது. முதல் **6** இடங்களில் ஈராக்**,** ஆப்கானிஸ்தான்**,** நைஜீரியா**,** பாகிஸ்தான்**,** சிரியா**,** ஏமன் நாடுகள் உள்ளன.

**147) ரத்தன் வத்தல் குழுவின் பரிந்துரை எதோடு தொடர்புடையது?**

இந்தியாவில் டிஜிட்டல் முறை பரிவர்த்தனைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பானது இந்த பரிந்துரை.

www.tnpscjob.com

**148) 2016 ம் ஆண்டுக்கான டைம் பத்திரிகையின் சிறந்த மனிதர் யார்?**

அமெரிக்க அதிபராக உள்ள டொனால்டு டிரம்ப்

**149) உலகப் பொருளாதார அமைப்பு நடத்திய ஆய்வின் படி எந்த மொழி உலகில் மிக அதிக செல்வாக்கை கொண்டுள்ளது?**

ஆங்கிலம்

**149) பிறந்த குழந்தை முதல் முதியவர் வரை அனைவரும் மருத்துவக் காப்பீடு மூலம் முழுவதுமாக பாதுகாக்கப்பட்டுள்ள முதல் மாவட்டம் எது?**

விஜயவாடா

**150) உலகின் மிக அதிகாரமுள்ள வி.ஐ.பிக்களின் பட்டியலில் 2016ம் ஆண்டுக்கான நபராக போர்ப்ஸ் பத்திரிகையால் தேர்வானவர் ?**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின். **2**ம் இடத்தை பிடித்தவர் அமெரிக்காவின் அடுத்த அதிபராகவுள்ள டிரம்ப்.

**151) மகிளா போலிஸ் வாலன்டியர் எனப்படும் மத்திய அரசின் திட்டம் எதோடு தொடர்புடையது?**

காவல்துறைக்கும் - மக்களுக்கும் இடையே சுமுகமான உறவை ஏற்படுத்துவதும் காவல் துறை மீது நம்பிக்கை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கம். இதை முதலில் செயல்படுத்திய மாநிலம் அரியானா

**152) இந்திய வங்கிகளின் கூட்டமைப்பின் புதிய தலைவர் யார்?**

வி.ஜி.கண்ணன்

**153) மூன்றாம் பாலினத்தவருக்கான முதல் பிரத்யேக பள்ளி எங்கு தொடங்கப்பட்டது?**

கொச்சி**,** கேரளா

**154) யுனிசெப் அமைப்பின் புதிய தூதர் யார்?**

நடிகை பிரியங்கா சோப்ரா

www.tnpscjob.com

**155) ஆசிய பசிபிக் பகுதியில் கார்பன் மாசு இல்லாத 2வது விமான நிலையம் எது?**

ஐதராபாத் விமான நிலையம். முதல் விமான நிலையம் டில்லி.

**156) ஐ.நா., சபையின் புதிய பொதுச் செயலராக பதவியேற்கவுள்ள அன்டோனியா கட்டார்ஸ் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?**

போர்ச்சுகல்.

**157) நியூசிலாந்தின் புதிய பிரதமர் யார்?**

பில் இங்கிலிஷ்

**158) 2016ம் ஆண்டுக்கான ஞானபீட விருது யாருக்கு அளிக்கப்பட்டுள்ளது?**

சங்கா கோஷ், வங்காள கவிஞர்

**159) OCMC என்பதன் விரிவாக்கம் என்ன?**

**Online Consumer Mediation Centre .** இந்தியாவில் நுகர்வோரின் குறைகளை களைய மத்திய அரசு பெங்களூருவில் உள்ள தேசிய சட்டப் பள்ளி நிறுவனத்துடன் உருவாக்கியது.

**160) வணிகர்களுக்கான ஈசிபே என்னும் மொபைல் ஆப் அறிமுகம் செய்துள்ள வங்கி எது?**

ஐ.சி.ஐ.சி.ஐ., வங்கி

**161) 2018ம் ஆண்டுக்கான மகளிர் ஹாக்கி உலகக் கோப்பை எங்கு நடைபெற உள்ளது?**

இங்கிலாந்து

**162) நியூ டென்மார்க் மற்றும் பிரெடரிக் தீவுகள் என்னும் பெயரால் அழைக்கப்படும் இந்திய தீவு எது?**

அந்தமான் நிகோபார்

**163) விட்டியா சஹஸ்ட்ரா அபியான் என்னும் மத்திய அரசின் திட்டத்தின் நோக்கம் என்ன?**

ரொக்கப் பணம் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதல்

www.tnpscjob.com

**164) ஆசிய கிரிக்கெட் கோப்பையை (19 வயது) வென்ற அணி எது?**

இந்தியா

**165) 'டுரோன்' என்னும் ஆளில்லா சிறு விமானம் மூலம் தபால் பட்டுவாடாவை அறிமுகம் செய்துள்ள நாடு எது?**

பிரான்ஸ்

www.tnpscjob.com